ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | தொடர்பூட்டல் திணைக்களம் |
| திகதி | 2021 யூலை 05 |

## இலங்கை நாட்டுக்கான பன்னாட்டு முறிகளில் உரிமம்பெற்ற வங்கிகளின் முதலீடுகள்

இலங்கை மத்திய வங்கியானது பொதுமக்கள் மற்றும் முதலீட்டாளர் சமூகத்திற்கு பின்வரும் தகவல்களை வழங்க விரும்புகின்ற அதேவேளை, வங்கித்துறையின் நிலைத்திருக்கும் தன்மைக்கு சவால்விடுக்கின்ற தரமிடல் நிறுவனங்களின் அறிக்கைகள் மற்றும் இலங்கை நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் என்பவற்றில் உரிமம்பெற்ற வங்கிகளின் முதலீடுகள் தொடர்பான ஊகங்களையும் மறுக்கின்றது.

பின்வரும் முக்கிய இடர்நேர்வு தணிப்பு நடவடிக்கைகளின் அடிப்படையில் முதலீட்டு வாய்ப்புக்களை வசதிப்படுத்துவதற்காகவும் நாட்டுக்கான வெளிநாட்டுச் செலாவணியின் உட்பாய்ச்சலை மேலும் ஊக்குவிப்பதற்குமாக இலங்கை மத்திய வங்கியானது, வெளிமூலங்களிலிருந்தான வளங்களிலிருந்து நாட்டுக்கான பன்னாட்டு முறி மற்றும் இலங்கை அபிவிருத்தி முறி ஆகியவற்றில் சமமாகப் பகிரப்பட்டளவிலான முதலீடுகளை உரிமம்பெற்ற வணிக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியவை மேற்கொள்ள அனுமதிக்கின்றது.

- மூலதனப் போதுமை விகிதம்: அரசாங்கத்திற்கான வெளிநாட்டு நாணய வெளிப்படுத்தல்களிலிருந்து எழும் இடர்நேர்வைத் தணிப்பதற்காக, இலங்கை மத்திய வங்கியானது அரசாங்கத்திற்கான வெளிநாட்டு நாணய வெளிப்படுத்தல்களிலிருந்தெழும் கடன் இடர்நேர்வுக்காக பாசல் III கட்டமைப்பின் கீழ் குறித்துரைக்கப்படும் மூலதனக் கட்டணம் மற்றும் அரச பிணையங்களிலான வர்த்தக முதலீடுகளிலிருந்தெழும் சந்தை இடர்நேர்வுகளை பாசல் III கட்டமைப்பின் கீழ் குறித்துரைக்கப்படும் பொது மூலதனக் கட்டணம் போன்ற உள்ளிட்ட தேவையான ஒழுங்குமுறைப்படுத்தல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தியுள்ளது.

- வெளிநாட்டு நாணயக் கடன்களுக்கான உச்சவரம்பு: வெளிநாட்டு நாணயக் கடன்களிலிருந்து எழும் இடர்நேர்வைத் தணிக்கும் நோக்கில் வெளியகக் கடன் மதிப்பீடு மற்றும் மூலதனப் போதுமை விகிதங்களின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட உச்ச வரம்பிற்கு உட்பட்டு அத்தகைய கடன்களை உரிமம்பெற்ற வங்கிகள் மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றன. சமீபத்திய கிடைக்கக்கூடிய கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கைகளின்படி மொத்தச் சொத்துக்களின் சதவீதமாக 5 சதவீதம் தொடக்கம் 10 சதவீதமாக இருக்கும்படியாக உச்சவரம்பு வெளிப்படுத்தப்படுகிறது.

- வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மை விகிதம்: உரிமம்பெற்ற வங்கிகள் அவற்றின் வெளிநாட்டு நாணய தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யப் போதுமான வெளிநாட்டு நாணயத் திரவச் சொத்துக்களை வைத்திருப்பதை உறுதிசெய்ய பாசல் III திரவத்தன்மை கணிப்பீடு விகிதம் மற்றும் அதன் கண்காணிப்புக் கருவிகள் மூலம் வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மை நிலைகள் கண்காணிக்கப்படுகின்றன.

- ஒருங்கிணைந்த இடர்நேர்வு மேலாண்மைக் கட்டமைப்பு: உரிமம்பெற்ற வங்கிகள் இடர்நேர்வைக் கண்காணிப்பதற்கும் நிர்வகிப்பதற்கும் ஒருங்கிணைந்த இடர்நேர்வு நுட்பங்களை கொண்டிருக்க வேண்டும் மற்றும் அவை எதிர்நோக்கும் பல்வேறு இடர்நேர்வுகளை எதிர்கொள்ளப் போதுமான மூலதனக் கிடைப்பனவையும் உறுதிசெய்ய வேண்டும். ஒருங்கிணைந்த இடர்நேர்வு மேலாண்மைக் கட்டமைப்பானது பல்வேறு முக்கியமான இடர்நேர்வுகள் அத்தகைய இடர்நேர்வுகளின் சாத்தியமான வளங்கள், மற்றும் விவேகமான மட்டங்களில் அத்தகைய இடர்நேர்வுகளை அடையாளம் காணவும், கண்காணிக்கவும் மற்றும் கட்டுப்படுத்துவதற்குமான பொறிமுறையை உள்ளடக்கியுள்ளது.

- சந்தை இடர்நேர்வு மற்றும் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு: உரிமம்பெற்ற வங்கிகளில் எந்தவொரு வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வைக் குறைப்பதற்காக சந்தை இடர்நேர்வு முகாமைத்துவ முறைமையான சந்தை நடத்தையை உறுதிப்படுத்துவதற்கான முறைமை, வெளிநாட்டுச் செலாவணி வர்த்தக நடவடிக்கைகள், சந்தை நடத்தை மற்றும் திறைசேரித் தொழிற்பாடுகளை வலுப்படுத்துவதற்கு உரிமம்பெற்ற வங்கிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி என்பவை, அத்தகைய நிறுவனங்களுக்கு சந்தையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீட்டு வாய்ப்புக்களை அடிப்படையாகக் கொண்டு வெளியக மூலங்களிலிருந்து நிதிகளைப் பெறுதல் அவர்களது நிதிநிலைமைக் கூற்றின் வலிமையை அடிப்படையாகக் கொண்டதாகவும் மற்றும் முன்மதியுடைய இடர்நேர்வு தணிப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றியதன் பின்னருமாகும்.

உரிமம்பெற்ற அனைத்து வங்கிகளும் பாசல் III பன்னாட்டு தரநியமங்கள் மற்றும் ஏனைய முதன்மை முன்மதியுடனான தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட மூலதனப் போதுமை மற்றும் திரவத்தன்மைத் தேவைப்பாடுகள் என்பவற்றுக்கு இணங்கியொழுகுகின்றன என்பதை இலங்கை மத்திய வங்கி தெரிவிக்க விரும்புவதுடன், இதன்மூலம் ஒரு தாக்குப்பிடிக்கும் தன்மையுடைய வங்கித்துறை நாட்டில் பிரதிபலிக்கப்படுகின்றது.

மேலும், இலங்கை அரசாங்கம் தனது கடன் சேவைப் பொறுப்புக்கள் அனைத்தும் உரிய நேரத்தில் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான தனது நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்துவதுடன், இதனால் இலங்கையின் கடன் தொடர்பான அனைத்துப் பொறுப்புக்களையும் பூர்த்தி செய்யும் களங்கமற்ற பதிவைப் பேணுகின்றது. இதன்படி, 2021 யூலை 27 அன்று முதிர்ச்சியடையும் ஐ.அ.டொலர் 1 பில்லியன் பெறுமதியான நாட்டுக்கான பன்னாட்டு முறியை செலுத்துவதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே நடைமுறையில் உள்ளன.